Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 41/2024 PW-6**

Name : சத்தியா (எ) சந்தியா
Father / Husband name : மணிமாறன்
Village : சாரம்
Age : 18
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.12.2025

A1, A2 present. APP present.

**முதல் விசாரணை**

நான் 2ம் ஆண்டு இன்ஜினியரிங் படித்துவருகிறேன். அ.சா.1 மஞ்சுளா எனது அம்மா. அ.சா.2, அ.சா.4 எனது ஊரை சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 03.03.2024 அன்று இரவு 9 மணியளவில் எங்கள் ஊரிலுள்ள கடைக்கு நான் நடந்து சென்றுவிட்டு வரும்போது எதிரி துரைமோகன எனது கையை பிடித்து இழுத்து எனது அம்மாவை வெளியில் வருமாறு சொன்னார். அப்போது துரைமோகனின் மனைவியும் இருந்தார். அப்போது நான் கத்தி கூச்சலிட்டபோது எனது அம்மா வெளியில் வந்தபோது உனக்காக தான் நான் காத்திருந்தேன், உனக்கு ஆம்பள பிள்ளை வேண்டும் என்றால் என்னுடன் வா என்று சொல்லி அசிங்கமான வார்த்தைகளால் எங்ககளை பேசினார்கள், நானும் எனது அம்மாவும் வீட்டின் உள்ளே சென்று கதவை சாத்தும்போது எதிரிகள் கேட்டை கட்டையால் அடித்து உடைத்தார்கள். எனக்கும் எனது அம்மாவிற்கும் கொலை மிரட்டல் விடுத்து, எதிரி துரைமோகன் அம்மாவை கட்டையால் இடது கால், இடது கையில் அடித்து, நெஞ்சு மற்றும் உயிர்நிலையில் அடித்தார்கள். பின்னர் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்தார்கள். பின்னர் எனது அப்பா 10.30 மணிக்கு வந்து எனது அம்மாவை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். சம்பவம் சம்மந்தமாக அம்மா ஒலக்கூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். நடந்த சம்பவத்தை நான் எனது செல்போனின் மூலம்

பதிவு செய்தேன். அந்த பதிவுகள் தற்போது என்னிடம் உள்ளது.

**நீதிமன்ற கேள்வி -** பிரச்சனை நடந்தபோது போலிசார் என்னை சம்பவம் சம்மந்தமாக கேட்டார்களா என்றால் கேட்டார்கள், நான் நடந்ததை சொன்னேன். 24.11.2025 அன்று நீதிமன்ற சம்மன் கொடுத்தும் எதற்கு வரவில்லை என்றால் நான் சென்னையில் கல்லூரியில் செமஸ்டர் எக்சாம் நடந்ததால் என்னால் வரயியலவில்லை. போலிசார் என்னை கேட்டபோது நான் செல்போன் மூலம் பதிவு செய்ததை சொன்னேனா என்றால் சொன்னேன். அதனை போலிசார் வாங்கிக்கொண்டார்களா என்றால் இல்லை, பதிவை பார்த்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**